**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

O.S.No. 661/2020 **P.W.1**

Deposition of witness for solemnly affirmed byTmt.S.Sangeetha, Assistant of this court on 12.01.2026 in accordance with the provision of the Act 1873.

| | | |
|---|---|---|
| Name | : | காமாட்சியம்மாள் |
| Husband Name: | : | கருப்பழகி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் நான் படிக்கவில்லை. எனது கணவர் தற்போது உயிருடன் இல்லை. எனது கணவர் 2025ம்வருடம் வைகாசி மாதத்தில் 8 மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். தேதி ஞாபகமில்லை. எனக்கு இரண்டு ஆண்மக்கள். அவர்கள் ராஜவேல், பிரபாகரன் ஆவார்கள். இவ்வழக்கை எந்த ஊரில் உள்ள சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கஸ்தூரிபட்டியில் உள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு சங்கதிகளை வழக்கறிஞரிடம் விவரங்களை நான் சொல்லி தயாரிக்கப்பட்டதா என்றால் இல்லை எனது கணவர் சொல்லி தயாரிக்கப்பட்டது. இவ்வழக்கு தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, எனது மகன்களுக்குதான் தெரியும். இதுநாள்வரை தாவா சொத்தின் சர்வே எண்ணை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொள்ளவில்லை.

இவ்வழக்கை எவ்வளவு விஸ்தீரணத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 75 செண்ட் நிலத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இத்தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் தாவா சொத்தை கணபதி என்பவரிடமிருந்து கிரையத்திற்கு வாங்க பணம் கொடுத்திருந்தோம் ஆனால் கிரையம் செய்துகொடுக்கவில்லை.

வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் போக தாவா சொத்து குறித்து வேறு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் எனது மகன்களை கேட்டால்தான் தெரியும். இவ்வழக்கில் உள்ள சங்கதிகள் மற்றும் ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் யார் தாக்கல் செய்துள்ளார் மற்றும் அந்த ஆவணங்கள் குறித்து விவரங்கள் தெரியுமா என்றால் எனது கணவர் தாக்கல் செய்தார் அதுகுறித்த விவரங்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நாற்புற சக்குபந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். வடக்கு மற்றும் மேற்கில் முருகேசன் நிலம், தெற்கில் கருப்பழகியின் நிலம், கிழக்கு துரையின் நிலம் உள்ளது. தாவாசொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது என்று பிரதிவாதிகள் குறிப்பிட்டு பதிலுரை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

தாவா சர்வே எண்ணில் மொத்தம் 15 ஏக்கர் 32 செண்ட் என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி தாவா சர்வே எண் வருவாய்துறையில் பாறை என வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆன செட்டில்மெண்ட் காலத்தில் அ பதிவேட்டில் பாறை என்றுதான் வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. இத்தாவா சொத்தானது எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணதில் வா.சா.ஆ.1 ஆவணத்தை போலியாக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின்படி தாவா சொத்தில் நான் உரிமை கோர முடியாது என்றும், தாவா சொத்தான ச.எண்.162/2ல் மொத்தம் 15 ஏக்கர் 32 செண்ட் அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் எனவே தாவா தள்ளுபடியாக கூடியது என்று சொன்னால் சரியல்ல. சூசை என்பவருக்கு டி கார்ட் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், நான் தாவாசொத்தில் அனுபவத்தில் உள்ளது என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் பட்டா

வழங்கவில்லை. தாவா சொத்து இதுநாள்வரை அரசாங்கத்தின் அனுபவத்தில்தான் உள்ளது என்றும், எனவே தாவா தள்ளுபடியாக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

Sd/–E.Ridhula
DM,SDM.

Sd/Jeyalakshmi